18.04.2018

**அசல் வழக்கு எண்: 118/2014**

**வா.சா.1 : முஜிபிர் த/பெ குலாப்ஜான்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 கிரைய ஒப்பந்தத்தில் என் சகோதரிகள் இருவரும் தரப்பினர்கள் இல்லை என்றால் அது சரிதான். அதேபோல் வா.சா.ஆ.8 ரத்து பத்திரத்திலும் என் சகோதரிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் அது சரிதான். வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ,8-ல் கடனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்டதாக வாசகம் எதுவும் இல்லை என்றால் அது சரிதான். வா.சா.ஆ.7 சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் யாஸ்மின் என்பவருக்கு விற்பதற்காக ஒப்பந்தம் போட்டு பிறகு அந்த ஒப்பந்தத்தை வா.சா.ஆ.8- மூலம் ரத்து செய்துள்ளோம் என்றால் அது சரிதான். என் தந்தை இறந்த தேதி தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. என் தந்தை இறக்கும்போது நான் மைனர் என்றால் அது சரிதான். வா.சா.ஆ.1/பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதும்போதே என் தந்தை குலாப்ஜான் 10 வயது மைனர் என்றும், என் சித்தப்பா அமீர்ஜான் என்பவருக்கு 7 வயது மைனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது சரிதான். மேற்படி மைனர்களுக்கு கார்டியன் பாத்திமா பீவி என்று வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது சரிதான். எங்கள் தந்தை இறந்த பிறகு எங்கள் தாயார் தான் எங்களைப் படிக்க வைத்து எங்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் அது சரிதான். வா.சா.ஆ.2/பாக பாத்திய அக்கு விடுதலைப் பத்திரம் மூலம் என் அப்பாவுக்கும் சித்தப்பாவுக்கும் மற்றும் பெரியப்பாவுக்கும் சில சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது சரிதான். ஏற்கனவே நாங்கள் குடும்பச் சொத்துக்களை பொறுத்து தனித்தனியாக பிரித்து அனுபவித்து வந்தோம் என்றாலும், ஏக குடும்பமாக இருந்து வரவில்லை என்றாலும் அது சரியல்ல. எங்கள் சித்தப்பா அமீர்ஜான் குடும்ப நலனுக்காகத் தான் சொத்துக்களை மணிமேகலைக்கு விற்றார் என்றாலும், அதனால் அந்த கிரையம் செல்லும் என்றாலும், அதை கேள்வி எழுப்ப எனக்கு உரிமை இல்லை என்றாலும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றாலும் அது சரியல்ல.

WEB COPY

ஒம்/-வி.பி.சுகந்தி,எம்.எல்.,
சார்புநீதிபதி
ஊத்தங்கரை.